**வெலிகம நகர சபை - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெலிகம நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, வெலிகம நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் (6)(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளளிப்பு செய்யப்படாத நிரந்தர ஊழியர் சம்பளம் ரூபா 215,096 தொகை மற்றும் மிகையாக மீளளிப்பு செய்யப்பட்ட மந்திரிமார் கொடுப்பனவு ரூபா 113,333 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | நிரந்தர ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஊழியர் கடன் வட்டி 2022 ஜனவரியில் மீளளிப்பு செய்யப்பட்டதெனவும், மிகையாக மீளளிப்பு செய்யப்பட்டிருந்த மந்திரிமார் படி 2022 ஆண்டில் பதிலீடு செய்யும் படி உள்ளூராட்சி திணைக்களத்தை அறிவுறுத்தப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 1,000,000 இற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கடன் கொடுத்தோர்களின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், உள்ளவாறான கணக்காய்வுக் கட்டணம் ரூபா 391,500 தொகையினை தீர்த்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்திருக்கவில்லை. | நாட்குறிப்பு சீராக்கல்களின் மூலம் மேலதிக ஏற்பாடுகளை அகற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி மற்றும் துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளிடையே ரூபா 5,807,315 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வங்கி இணக்கக் கூற்றுக்கள் , விரிவான அட்டவணைகள், மீதியை உறுதிப்படுத்தல்கள் மற்றும் மீதி தொடர்பான அட்டவணைகள் ஆகிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 8,031,032 தொகைக்கான 10 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. | போதியளவு தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது என. | கணக்குகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளை உறுதிப்படுத்தக்கூடிய எழுத்துமூல சான்றுகள் வைத்திருக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 30,991,088 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 25,284,612 தொகையாகும்.

### 2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

#### (அ) வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 6,014 வீதவரி அலகுகளிலிருந்து ரூபா 12,098,252 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டதுடன், அவற்றில் அரச நிறுவனங்களுக்குரிய 08 ஆதனங்களின் கூட்டுத்தொகை ரூபா 278,002 இற்கான நிலுவை வீதவரி வருமானம் ஒன்றும் காணப்பட்டது. | நிலவிய கொரோனா தொற்றுநோய் காரணமாக வருமானம் அறவீடு செய்ய முடியாதிருந்ததுடன், தற்போது நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடமாடும் சேவை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |

**(ஆ) கடை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு 122 வாடகையாளரிடம் ரூபா 10,162,260 தொகை நிலுவையாக இருந்தது. | 2020 ஆண்டுக்கு ஒப்பாக சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முன்னேற்றமொன்று காணப்பட்டது என. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |

**(இ) குத்தகை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு ரூபா 5,867,985 தொகைக்கான நிலுவையொன்று காணப்பட்டது. | நிலுவை குத்தகைத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கைக்கு அனுப்பப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |

**(ஈ) வாடி வீட்டு வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,462,974 தொகை நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை வாடிவீட்டு வாடகையை அறவீடு செய்வதற்காக கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டதுடன், வெலிகம வாடி வீட்டை நகர சபைக்கு உரித்தாக்குவதற்காக பொது நிருவாகச் செயலாளருக்கு மற்றும் தென் மாகாண ஆளுனருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் காவல் சேவைக்காக 2014 ஆண்டு முதல் 06 காவலாளிகள் சேர்க்கப்பட்டிருக்கும் போது நகர சபை அலுவலகம் மற்றும் கப்பரத்தொட்ட சேதனப் பசளை செயற்களத்தில் பாதுகாப்புக்காக 12 மணித்தியாள சேவை முறையொன்றுக்கான ரூபா 980 தொகை செலுத்தும் அடிப்படையில் மீளாய்வாண்டு ஜனவரி | மேலதிக நேர கொடுப்பனவு செலுத்த தேவைப்படாமை 06 காவலாளிடம் பெற்றுக்கொள்ளும் சேவைக்கு சமமான சேவையொன்று 04 பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சேவையின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக | சேவையொன்றை பெற்றுக்கொள்ளும் போது கிரயம் குறையக்கூடியவாறு செயற்பட வேண்டும். |

| | |
|---|---|
| மாதம் முதல் மார்ச் மாதம் வரை தனியார் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றிலிருந்து இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சேவையை பெற்றுக்கொண்டிருந்தமையால் சம்பளம் மற்றும் படி என ரூபா 352,800 தொகை மற்றும் மீளாய்வாண்டு திசெம்பர் முதல் 2022 ஆண்டின் பெப்ரவரி வரை வேறொரு பாதுகாப்பு தனியார் நிறுவனத்தில் இருந்து 12 மணித்தியாள சேவை முறைக்காக ரூபா 1,174.2 தொகை செலுத்தும் அடிப்படையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நால்வரின் சேவையை பெற்றுக் கொண்டதற்காக ரூபா 347,577 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இருந்தல், பல நிருவாகச் சிக்கல்கள் குறைதல், உரம் மற்றும் சில விடயங்களில் நடைபெறக்கூடிய களவுகள் குறைவடைதல், தொடர்ச்சியாக மேற்பார்வை செய்ய தேவைப்படாமை ஆகிய காரணங்களினால் பாதுகாப்புச் சேவையொன்று செயற்படுத்தப்பட்டிருந்தது என. |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான நகர எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ள 03 கட்டிடங்கள் தொடர்பான வரைபுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவா என உறுதிப்படுத்துவதற்கான சாட்சிகள் வெளிக்கள கணக்காய்வுப் பரிசோதனையின் போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் பல்வேறு காரணங்களினால் அங்கீகரித்தல் மறுதளிக்கப்பட்டிருந்த 05 கட்டிட விண்ணப்பங்கள் மற்றும் முறையான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் கட்டிடங்கள் நிர்மாணித்தல் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகாரசபை திட்டம் மற்றும் அபிவிருத்திக் கட்டளைகள் / பிரமாணங்கள் அடங்கிய 2235/54 இலக்கம் கொண்ட மற்றும் 2021 ஜுலை 08 திகதிய வர்த்தமானி அறிவித்தலின் 02 ஆவது அட்டவணையின் பிரகாரம் செயற்பட்டு ரூபா 594,900 இற்கான கட்டணத்தை அறவீடு செய்து நிர்மாண வேலையை முறைப்படுத்தல் அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | குறிப்பிட்ட அங்கீகாரம் இன்றிய நிர்மாண வேலைகளை முறைப்படுத்துவதற்காக எழுத்துமூலம் அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததெனவும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட கட்டிடத்தின் நிர்மாண வேலையை 07 நாட்களுக்குள் அங்கீகரித்துக்கொள்ளும் படி ஞாபகமூட்டல் கடிதம் அனுப்புதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததென. | நிர்மாண வேலைகளை முறைப்படுத்துவதற்காக அல்லது அப்புறப்படுத்துவதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடந்த மற்றும் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தின் மூலம் ரூபா 8,400,015 இற்கான மதிப்பீடொன்றிக்கு சமூக ஒப்பந்த அமைப்பொன்றுக்கு சாட்டப்பட்டிருந்த 18 வடிகால் முறைமைகள் மற்றும் பாதை அபிவிருத்தி வேலைகளுக்குரிய 1:2:4 கலவையில் கொங்கிரீட் இடும் வேலைக்காக மதிப்பீடு தயாரிக்கும் போது தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 2019 ஆண்டில் இரண்டாவது அரைப் பகுதிக்குரிய ST-047 விகிதம் ஆகிய ரூபா 17,227.95 தொகைக்குப் பதிலாக ரூபா 20,589 இற்கான விகிதத்தை பயன்படுத்தியமையால், 18 நிர்மாண வேலைகளுக்குரிய 69 கொங்கிரீட் கனமீற்றர்கள் இடுவதற்காக ஒரு மீற்றருக்கு ரூபா 3,361.05 வீதம் ரூபா 231,912 தொகை மிகையாக ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் புதிய கூறுவிலைகள் கிடைத்துள்ளமையால் நிர்மாண வேலைகளுக்காக அந்தக் கூறுவிலைகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது என. | சரியாக பில் பத்திரங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |